தேசிய வடிவமைப்பு நிலையம் - 2024
----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் (‘‘நிலையம்’’) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்களும் குறிப்புக்களுடன் உள்ளடங்கலான நிதிக்கூற்றுக்களுக்கான கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் அதிகாரச்சட்டத்தின் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிலையத்தின் நிதிக்கூற்றுகளின் ஊடாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிலையத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிலையத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிலையம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 53 பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடும் அனைத்து புள்ளிவிபர	தவறுதலாக திகதியை குறிப்பிடும் போது 2024.01.01 மற்றும் 2024.12.31 ஆக உரிமை	நியம்ம பிரகாரம் அனைத்து புள்ளிவிபர தகவல்களிற்காக

	தகவல்களுக்காக முன்னைய ஆண்டின் ஒப்பீட்டு ரீதியான தகவல்ககளை வெளிப்படுத்த வேண்டிய போதும் நிலையத்தினால் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள கூற்றிற்காக ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	மூலதன மாற்றங்கள் கூற்றில் ஒப்பீட்டு ரீதியாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது 2024.01.01 மற்றும் 2023.12.31 ஆக சரியாக வேண்டும்.	கட்நத ஆண்டு ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	முன்னைய ஆண்டு சீராக்கத்திற்காக ரூபா 637,934 குறைத்தல் மற்றும் ரூபா 160,797 ஆன சேர்ப்பனவாக திரண்ட ஒருக்கதிதிற்கு ரூபா 476,598 தொகை சீராக்கப்பட்டிருந்த போதும் அதற்குரிய இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 47 பந்தியின் பிரகாரம ஒப்பீட்டு ரீதியான பெறுமானங்களை மீண்டும் வெளியிட்டிருக்காததுடன் நியமத்தின் 54 பந்தி பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் ஆண்டுகளில் கணக்குகளை தயாரிக்கும் போது சரியான ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் மற்றும் வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.	நியமம் பிரகாரம் ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகளை மீண்டும் வெளிப்படுத்த வேண்டும்.
(இ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் 44 பந்தியின் பிரகாரம் இருப்பு பதிவழிப்பு பெறுமானம் மற்றும் இருப்பு தொடர்பான அனைத்து நட்டங்கள் அந்த பதிவழிப்பு அல்லது நட்டம் ஏற்படும் காலப் பகுதியின் செலவாக இனங்காண வேண்டிய போதும் பூர்த்தியான பண்டங்களில் உள்ளடங்கும் ரூபா 198,792 ஆன பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத இருப்பு மற்றும் ரூபா 195,481 ஆன காலாவதியான இருப்பு (Obsolete Stock) செலவாக இன்ஙகாண்பதற்கு பதிலாக இருப்பிலிருந்து குறைத்து காட்டப்பட்டுள்ளது.	பதில் வழங்கப்படவில்லை.	நியமம் பிரகாரம் இருப்பு தொடர்பான நட்டத்தை, அது இடம்பெறும் காலப் பகுதியின் செலவாக இனங்காண வேண்டும்.
(ஈ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 92 (அ) மற்றும் (ஆ) பந்தியின் பிரகாரம், தற்காலிகமாக செயலிழந்துள்ள கிரய பெறுமதி ரூபா 5,000,000 ஆன மோடார் வண்டியொன்று மற்றும் முழுமயையாக பெறுமானத் தேய்விடப்பட்ட எனினும் இன்னும் பாவிக்கப்படும் கிரயம் ரூபா 11,480,319 ஆன கனணி மற்றும் உதிரிப்பாக உருப்படிகளின் மொத்த எஞ்சிய பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை.	கனணி மற்றும் உதிரிப் பாககங்களை 2025 ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யவும் அதன் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யவும் அதன் பிரகாரம் சரியான பெறுமதிகளை நிதிக்கூறுக்களிற்கு உட்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.	நியமம் பிரகாரம் தற்காலிகமாக செயலிழந்துள்ள மற்றும் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்களின் எஞ்சிய பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும்.

(உ)	மீளாய்வாண்டில் திறைசேரியில் இருந்து கிடைத்த மூலதன மானியம் ரூபா 3,387,580 தொகை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 பிரகாரம் ஆண்டில் பரிமாற்றப்படாத கொடுக்கல் வாங்கல்களினால் கடைத்த வருமானமாக இனங்காணாது உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் திரண்ட ஒதுக்கத்திற்கு சேர்த்துக் காட்டியதால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அப் பெறுமானத்தால் அதிகரித்திருந்தது. மேலும் ரூபா 99,805,579 ஆன திறைசேரி மானியம் மற்றும் ரூபா 4,946,059 ஆன அமைச்சு மானியம் இனங்காணப்படும் கொள்வையை வெளிப்படுத்தி இருக்கவில்லை.	2025 ஆண்டு முதல் நியம இலக்கம் 11 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமம் பிரகாரம் அனைத்து மானியங்களும் வருமானமாக இனங்காணப்பட வேண்டும்.
(ஊ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 14 இன் 34 பந்தியின் பிரகாரம் பிரதான முகாமைத்துவ தரப்பினரிற்கு செலுத்திய ஊதியம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய போதும் நிலையத்தின் பிரதான முகாமைத்துவ ஆளணியின் அந்த தகவல்களை வெளிப்படுத்தி இருக்கவில்லை. நியமத்தின் 27 பந்தி பிரகாரம் தொடர்புடைய தரப்பினருடன் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் அல்லது அவ்வாறான கொடுக்கல் வாங்கல் இடம்பெறவில்லை என நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.	நிறுவன தலைவரிற்கு செலுத்தும் படிகள் மற்றும் பணிப்பாளர் சபைக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நிலையத்தின் பணிப்பாளர் சபையின் தகவல்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியின் தகவல்கள் கட்டுப்பாட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.	நியமம் பிரகாரம் தொடர்புடைய தரப்பினருடன் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுக்களில் தனித் தனியாக வெளிப்படுத்த வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி வரிச் சட்டத்தின் 2(1) மற்றும் 102 பிரிவு	வருமான வரிக்காக பதிவு செய்ய அல்லது விடுவித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பொது திறைசேரி நிதிஏற்பாட்டின் மீது செயற்படும் நிறுவனமொன்ரென 2014 பெப்ரவரி 18 திதகிய உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	உள்நாட்டு இறைவரி வரிச் சட்டத்தின் பிரகாரம் வரிக்காக பதிவு செய்ய அல்லது வரி விடுவித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகம் செய்துள்ள அரச முயற்சிகளிற்கான செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பந்தி	2024 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 122 நாட்கள் தாமதித்து 2025 ஜுன் 30 திகதி சமர்ப்பிக்கப்பட்டு இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களுடன் வரைபு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	ஏற்பட்ட தவறுகளை தவிர்த்து 2025 ஆண்டில் உரிய திகதியில் நிதிக்கூற்றுக்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் உரிய திகதியில் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 14,158,176 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 11,739,450 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,418,726 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அபிவிருத்தி செலவினம் ரூபா 8,982,463 இனால் குறைவதற்கு ஒப்பாக தனிநபர் சம்பள ஊதியம் ரூபா 5,226,566 இனால் மற்றும் பணிக்கொடை ரூபா 5,773,976 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2021 ஆண்டின் போது பிரதான அலுவலகத்தில் CCTV கெமரா தொகுதியை பொருத்தும் போது மற்றும் கட்டிடத்தை நிர்மாணிக்கும் போது ஒப்பந்ததாரரிடமிருந்து நிறுத்தி வைத்திருந்த ரூபா 1,886,005 தொகை காணப்பட்ட போதும் 2022 சனவரி மாதத்தில் செயழிலந்த CCTV கெமரா தொகுதியை சுமுக நிலைக்கு கொண்டுவர மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	CCTV தொகுதியை தருத்துவதற்காக ஒப்பந்ததாரர் ஒருவரை தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட உள்ளது.	CCTV தொகுதியை விரைவில் திருத்த வேண்டியதுடன் உத்தரவாத காலத்தினுள் தொகுதி செயழிலந்து இருப்பின் நிறுத்தி வெத்த தொகையால் திருத்த ேண்டும்.
(ஆ)	பதிக் கையியந்திர புடவை மற்றும் உள்நாட்டு புடவை உற்பத்தி இராஜாங்க அமைச்சின் மூலம் 2020 நவம்பர் 21 திகதி புதிய 100 சாரி வடிவமைப்புக்களிற்காக வடிவமைப்பு மற்றும் உற்பத்திக்காக ரூபா 3,000,000 ஆன நிதிஏற்பாடு நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டு	செயற்திட்ட எதிர்பார்த்த இலக்கை அடைந்துள்ளதால் செயற்திட்டத்திற்காக வழங்கிய நிதிஏற்பாட்டின் மீதித் தொகை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை பற்றி அமைச்சிடம் அறிவுரை கோரப்பட்டுள்ளது.	பணி நிறைவடைந்திருப்பின் எஞ்சிய தொகையை விரைவில் தீர்க்க வேண்டும்.

இருந்ததுடன் இந்த சாரி உற்பததி சலுசல ஊடாக விற்பனை செய்ய உடன்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதுடன் ஒதுக்கிய நிதிஏற்பாடு பணமாக ரூபா 1,072,748 தொகை 2021 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை பயன்படுத்தாது நடைமுறை பொறுப்பின் கீழ் முன்கொண்டு வரப்பட்டுவரப்படுகின்றது.

3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	ஐக்கிய நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் களைஞ்ஞர்களை மேம்படுத்துவதற்காக கிடைத்த தொகையிலிருந்து ரூபா 2,312,228 தொகையை நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளாது 2015 ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் நடைமுறை பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.	நிறுவனத்திற்கு முதலீடாக ஈடுபடுத்த முடியுமான அபிவிருத்தி கடமையாக இந்த தொகை ஈடுபடுத்துவதற்கு 2025 ஜுன் 28 திகதிய இலக்கம் NDC/2025/BM-4/BP/38 கொண்ட பணிப்பாளர் சபை பத்திரத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டள்ளது. அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	ஐக்கிய நாட்டமைப்பினால் கிடைத்த இந்த தொகை எதிர்ப்பார்த்த கடமைக்காக ஈடுபடுத்த வேண்டும்.
(ஆ)	2023 ஜுன் 16 ஆம் திகதி வாகனம் ஒன்றிற்கு இடம்பெற்ற விபத்து தொடர்பாக முன்னால் தலைவரினால் உரிய வெளித்தரப்பினரிற்கு எதிராக தனியாக வழக்கு தாக்கழ் செய்திருந்ததுடன் அதற்காக மேற்கொண்ட ரூபா 150,000 தொகை வழக்கரிஞ்ஞர் செலவினம் மத்தியநிலையத்தின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேற்குறித்த வாகனம் 2024 ஒக்தோபர் 01 ஆம் திகதி மீண்டும் விபத்துக்குள்ளாகி இருந்த போதும் 2025 ஜுலை 15 ஆம் கணக்காய்வு திகதி வரையும் அதை சுமுக நிலைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	1982 இன் 35 ஆம் இலக்க தேசிய தேசிய கைப்பணி மன்றம் மற்றும் இணைந்த நிறுவன சட்டத்தின் பிரகாரம் இந்த மத்திய நிலையத்தில் முகாமைத்துவம் தொடர்பாக அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் சபையினால் 2024 ஜுன் 14 திகதிய இலக்கம் NDC/2024/BM/03/BP21 கொண்ட பணிப்பாளர் சபை பத்திரத்திற்காக வழங்கப்படும் தீர்மானம் பிரகாரம் மீது குறித்த வழக்கரிஞ்ஞர் கட்டணத்தை மீள்நிரப்பியுள்ளது. முதலாவது Toyota நிறுவனத்திடம் கேல்வி விலை பெற்றுக்கொள்ளப்பட்ட போதும் அந்த நிறுவனத்தின் துண்டுகள் இல்லாதததனால் இறக்குமதி செய்ய வேண்டியதுடன் அதற்காக மூன்று மாத காலங்கள் செல்லுவது எனவும் அது வரை வாகனத்தை டெயோடா நிறுவனத்தின் வைத்துக்கொள்ள முடியாது எனவும் அறிவித்திருந்தது.	தலைவரினால் தனியாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு இருப்பின் தலைவரிடமிருந்து விரைவில் அறவிட வேண்டும். வானத்தை விரைவில் சுமுக நிலைக்கு ஆக்க வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 பெப்ரவரி 02 திகதி கொள்வனவு செய்த ரூபா 249,000 பெறுமதியான பன் மற்றும் தும்பு தளர்ப்பதற்கு தேவையான இயந்திரமொன்ற கணக்காய்வு திகதிய 2025 ஜுன் 20 திகதி வரை தலைமை அலுவலகத்தில் வேலைத் தளத்தில் விளைவற்று காணப்பட்டது.	பன் மற்றும் தும்பு தளர்த்தும் இயற்திரத்தை பிரதேச செயலகத்துடன் தொடர்புடைய சங்கத்திற்கு ஒப்படைக்க தேவையான நடவக்கை எடுக்கப்படவில்லை.	இயந்திரத்தை தேவையான தரப்பினரிற்கு வழங்கி உரியவாறு புத்தகங்களிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	நிலையத்தினால் மீளாய்வாண்டில் ரூபா 737,687 செலவில் தேசிய கைப்பணி மன்றத்திற்கு சொந்தமான வலவ்வத்த பதிக் பயிற்சி நிலையத்தின் கழிவு நீர் சுத்திகரிக்கும் இயந்திரமொன்றை நிர்மாணித்திருந்ததுடன் கணக்காய்வு திகதிய 2025 ஜுன் 20 திகதி வரை அது எவ்வித பயன்பாடுமின்றி வியைவற்று காணப்பட்டது.	தேசிய கைப்பணி மன்றத்தின் கீழ் செயற்படும் பதிக் பயிற்சி நிலையம் ஒன்றாகையால் அந்த பயிற்சி நிலையத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்துவதன் மீது இயந்திரம் பயன்படுத்தப்படுகின்றது எனவும் அந்த நிறுவனம் செயற்படுத்தும் பயிற்சி நிகழ்சித் திட்டம் பற்றிய தகவல்கள் நிலையத்திடம் இல்லையென அறிவிக்கிறேன்.	இயந்திரத்தை ஆக்கபூர்வ பணியிற்கு பயன்படுத்த முறைமையொன்றை தயாரிக்க வேண்டும்.
(இ)	பதிக் துணி சாயமிடுவதற்காக மூலிகை கழிவுளை அடிப்படையாகக் கொண்ட தூள் மற்றும் சாந்து வகை தன்மையிலான 05 வகை சாயங்களை தயாரிப்பற்கான ஆராய்ச்சி செயற்திட்டத்தை 06 மாதங்களில் மேற்கொள்வதற்காக நிலையத்தினால் இலங்கை இலங்கை நானோ தொழில்நுட்ப நிறுவனத்துடன் 2024 பெப்ரவரி 28 திகதி உடன்படிக்கை செய்து 2025 ஏப்ரல் 30 திகதி வரை ரூபா 2,328,804 செலவிட்டிருந்த போதும் பணியை நிறைவு செய்து ஒப்படைக்காத காரணத்தால் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கம் அடையப் பெறவில்லை.	இந்த நிறுவனம் மற்றும் நானோ தொழில்நுட்ப நிறுவனம் உடன்பட்ட உடன்படிக்கை ஒன்று இல்லையென அறிவிக்கிறேன்.	2024 பெப்ரவரி 28 திகதி உடன்படிக்கை பிரகாரம் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கம் அடைந்து கொள்ள செயற்பாடுகளை எடுக்க வேண்டும்.
(ஈ)	2023 ஆண்டில் பதிக் வடிவமைப்பு நோக்கு நிகழ்ச்சித் திட்டத்திற்காக கொள்வனவு செய்த ரூபா 419,590 பெறுமதியான பூர்த்தியான பண்ட 93 உருப்படிகள் மீளாய்வாண்டு வரை களஞ்சியத்தில் விளைவற்று	பதில் வழங்கப்படவில்லை.	குறித்த பூர்தியான பண்டங்களை ஆக்கபூர்வ பணிக்காக பிரயோசனப்படுத்த நடவடிக்கை எடுக்க

	குவிக்கப்பட்டு காணப்பட்டன.		வேண்டும்.
(உ)	2024 ஆண்டின் செயல் நடவடிக்கை திட்ட பிரகாரம் மூங்கில் குழாய்களிற்காக கைநூல் ஒன்றை வடிவமைத்தல், வெளியிடுத்ல் மற்றும் வெளியீட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா 928,425 செலவிடப்பட்டு இருந்ததுடன் அவற்றில் ரூபா 581,700 தொகை 500 கைநூல்களை அச்சிடுவதற்காக செலவிட்டிருந்த போதும் குறித்த புத்தகங்களை பயன்படுத்தாது களஞ்சியத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது.	தன்னார்வ அமைப்புக்கள், அரச நிறுவனங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் இந்த துறையின்பால் பாரிய ஆர்வம் காட்டுவதுடன் அது நாட்டின் மரக் கைத்தொழில் துறைக்கும் சுயதொழில் துறைக்கும் விசேட உற்சாகமாக உள்ளது. அதன் பிரகாரம் இலங்கையில் மூங்கில் உற்பத்தி சார்ந்த ஆராய்ச்சி ரீதியான ஆய்வொன்றின் மூலம் தயாரிக்கப்பட்ட இந்த புத்தகம் இந்த துறைக்கு பிரவேசிக்கும் மக்களிற்கு பாரிய உதவியாக உள்ளது. பல்கலைக்கழகம் பாடசாலை மற்றும் பிராந்தி பொது நூலகங்களிற்கு பிரதி அனுப்ப தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	அரச நிதி சிக்கனமாக ஆக்கபூர்வமாக பணிகளிற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். இந்த துறையின்பால் ஆர்வம் காட்டும் மக்களிற்கு வழங்க அச்சிடப்பட்டதெனில் களஞ்சியத்தில் வைக்காது குறித்த தரப்பினரிற்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	ரூபா 819,976 பெறுமதியான சிங்களம் மற்றும் ஆங்கில மையக்கரு 100 புத்தகங்களை தெளிவான நோக்கமின்றி 2023 ஆண்டில் அச்சிட்டிருந்ததுடன் அவ்ற்றில் ரூபா 487,587 பெறுமதியான 53 புத்தகங்கள் 2025 மே 31 திகதி வரை நிலையத்தின் வளவில் விளைவற்று காணப்பட்டது.	இலங்கை சிங்கள கலை அலங்கார கூறுகளை சரியாக சமூகமயப்படுத்தும் நோக்கில் Motif புத்தகம் அச்சிடப்பட்டுள்ளது. புத்தக வெளியீட்டு விழாவில் அதிதிகள் மற்றும் களைஞர்களிற்கு சில அச்சுப் புத்தகங்களை வழங்கியதுடன் எஞ்சிய பிரதிகள் தேவைப்பாட்டின் மீது எதிர்கால பாவனைக்கு நிறுவனத்தின் நூலகம் மற்றும் களஞ்சிய பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளன. இந்த பிரதிகள் கலைஞர்களின் மற்றும் நூலகங்களில் தேவைப்பாட்டின் மீது தேவைக்கேற்ப வழங்கப்படுகின்றன.	அரச நிதி சிக்கனமாக ஆக்கபூர்வமாக பணிகளிற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டு நிதியை செலவிட வேண்டியதுடன் இந்த புத்தகங்களை விரைவில் தேவைப்பாட்டின் மீது விநியோகிக்க வேண்டும்.

3.4 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
பதிக் உற்பத்தி கற்பித்தல் மற்றும் அந்த கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள அதன் சார்ந்ததாக வசிக்கும் களைஞ்ஞர்களுக்கு பொது வசதிகளை வழங்கும் நோக்கில் 2021 திசெம்பர் 16 திகதி ரூபா 2,991,720 தொகை செலவிட்டு சுத்திகரிப்பு தொகுதியொன்றை இஸ்தாபித்திருந்த போதும் கணக்காய்வு திகதியான 2025 ஜூலை 15 வரையும் குறித்த தாங்கியின் கொள்ளளவான 3000 லீற்றர் நிறையாத காரணத்தால் அந்த சுத்திகரிப்பு தொகுதியை பயன்படுத்த முடியாமலிருந்தது.	2025 ஆண்டினுள் செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் கிடைக்கும் கோரிக்கை மீது பதிக் பயிற்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதுடன் சுத்திகரிப்பு தொகுதியை செயற்படுத்துவதற்கு போதுமான கழிவு நீர் சேர்ந்த உடன் மாத்திரம் அதை செயற்படுத்துவது மேற்கொள்ளப்படும்.	சிறந்த புரிந்துனர்வோடு மற்றும் உரிய திட்டத்துடன் கடமைகளை செயற்படுத்த வேண்டியதுடன் இந்த தொகுதியை பயன்படுத்துவதற்கு பொருத்தமான முறைமையொன்றை இஸ்தாபிக்க வேண்டும்.